இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 264 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 22 – திங்கள்கிழமை 05 மே 2025 – வெளியீர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 264 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 22 - Monday 05 May 2025 - Dak 16 Pages ₹ 5.00

## எந்தத் தடைகள் வந்தாலும் உரிமைகளை மீட்டு படிக்க வைப்போம்! கல்வியுடன்

# மாணவர்களுக்கு சமூக நீதியையும் கற்றுத்தர வேண்டும்!

### மாநில சுயாட்சி நாயகருக்கு கல்வியாளர்கள் நடத்திய பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, மே 5-**

**மாநில முதல்வர்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை நியமிக்கலாம் எனும் உரிமையினை மாநிலங்களுக்கு உச்சநீதி மன்றத்தின் மூலம் போராடி பெற்றுத் தந்த மாநில சுயாட்சி நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கல்வியாளர்கள் சார்பில் பாராட்டு விழா நேற்று முன்தினம் சென்னை ஜவகர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது.**

**இவ்விழாவில் பங்கேற்று ஏற்புரை நிகழ்த்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், எந்தத் தடைகள் வந்தாலும், உரிமைகளை மீட்டு படிக்க வைப்போம் என்றும் கல்வியுடன் மாணவர்களுக்கு சமூக நீதியையும் கற்றுத் தரவேண்டும் என்றும் எழுச்சியுரையாற்றினார்.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.5.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில், பல்கலைக்கழகங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு. தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் சார்பில் நடைபெற்ற மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.5.2025) சென்னை, ஜவகர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், பல்கலைக்கழகங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு, தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளின் சார்பில் நடைபெற்ற “மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு” விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

மாணவச் செல்வங்கள் எல்லாம் நன்றாக இருக்கிறீர்களா! மேடையில் இருக்கக்கூடிய எங்களுக்கே டயர்ட் ஆகிவிட்டது. நீங்கள் டயர்ட் ஆக வில்லை - எனர்ஜியோடு இருக்கிறீர்கள். இருந்தாலும், நான் சுருக்கமாக என்னுடைய ஏற்புரையை நிகழ்த்த விரும்புகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று தலைவர் பொறுப்பை ஏற்று உரையாற்றிருக்கக்கூடிய அய்யா ஆசிரியர் அவர்களே,

நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மூத்த அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களே,

முன்னிலை ஏற்றுள்ள சகோதரர் அமைச்சர் கோவி செழியன் அவர்களே,

அமைச்சர் எ.வ.வேலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே,

கழக பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களே,

தங்கை திருமதி கனிமொழி, ஜெகத்ரட்சகன் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தோழமை இயக்கத்தின் தலைவர்கள் சகோதரர் செல்வப்பெருந்தகை அவர்களே,

தோழர் சண்முகம் அவர்களே,

தோழர் முத்தரசன் அவர்களே,

எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன் அவர்களே,

பேராசிரியர் அய்யா காதர் மொஹிதீன் அவர்களே,

மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய கல்வியாளர்கள்

முனிரத்தினம் அவர்களே,

மதிப்பிற்குரிய ஜி.விஸ்வநாதன் அவர்களே,

மேனாள் நீதியரசர் அக்பர் அலி அவர்களே,

அருட்தந்தை அருண் அவர்களே,

டாக்டர் நாராயணசாமி அவர்களே,

ஹரி கே.தியாகராஜன் அவர்களே,

டாக்டர் நந்தினி ரங்கசாமி அவர்களே,

முனைவர் ஜி. ரவி அவர்களே,

முனைவர் ஆறுமுகம் அவர்களே,

முனைவர் ராஜேந்திரன் அவர்களே,

பேராசிரியர் மன்னர் ஜவஹர் அவர்களே,

முனைவர் திருவாசகம் அவர்களே,

பிரின்ஸ் கஜேந்திரன் அவர்களே,

எ.வ.குமரன் அவர்களே,

ஸ்ரீராம், மகேந்திரன், திருமதி மலர்விழி, பீட்டர், சாய் பிரகாஷ் மற்றும் பங்கேற்றிருக்கக்கூடிய பேராசிரியர் பெருமக்களே,

**உங்கள் அன்புக்கும் - நம்பிக்கைக்கும் இன்னும் கடுமையாக உழைப்பேன்!**

என் பாசத்திற்கும், பேரன்பிற்குரிய மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கலை நிகழ்ச்சிகளின் வாயிலாகவும் - பாராட்டுரைகள் வாயிலாகவும் - நீங்கள் பொழிந்த அன்பில் நான் திக்குமுக்காடி விட்டேன் என்றுதான் சொல்லவேண்டும்! நீங்கள் பாராட்டிவிட்டீர்கள் என்று நான் மகிழ்ச்சியின் உச்சத்திற்கு போகவில்லை. உங்களுடைய அன்புக்கும் - நம்பிக்கைக்கும் - எதிர்பார்ப்புக்கும் இன்னும் என்னை தகுதிப்படுத்திக் கொள்ள இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற எண்ணம்தான் எனக்குள் ஏற்படுகிறது!

‘மாநில சுயாட்சி நாயகர்’ என்று இந்த விழாவுக்கான இன்விடேஷனில் போட்டிருக்கிறீர்கள்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## திராவிட மாடல் ஆட்சியின் 4 ஆண்டுகால மகத்தான சாதனைகளால்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு குவியும் பாராட்டுகளும், விருதுகளும்!

### தொலைநோக்குத் திட்டங்களுக்கு அயல் நாடுகளிலும் ஐ.நா.மன்றத்திலும் வரவேற்பு!

**சென்னை, மே 5-**

**திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு மகத்தான சாதனைகளால் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டுகளும், விருதுகளும் குவிந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டங்களுக்கு அயல்நாடுகளிலும், ஐ.நா.மன்றத்திலும் பாராட்டி வரவேற்கப்படுகின்றன.**

**இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நான்காண்டு கால திராவிட மாடல் அரசின் மகத்தான சாதனைகளுக்காக இதுவரை எந்த முதலமைச்சரும் பெற்றிராத வண்ணம் திசையெட்டும் போற்றிப் புகழ ஒன்றிய அரசும், பல்வேறு நிறுவனங்களும், பத்திரிகைகளும் பாராட்டி விருதுகளை ஏராளமாக வழங்கியுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில் நான்கு ஆண்டுகள் முடிவடைந்து ஐந்தாம் ஆண்டு தொடங்கும் நிலையில், அவர் புகழ் அவனியெங்கும் எதிரொலிப்பதைக் காண முடிகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைநோக்குச் சிந்தனைகளுடன் திட்டமிட்டு வகுத்து நடைமுறைப்படுத்திவரும் திட்டங்கள் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்றன; காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி மருத்துவம் திட்டம், முதலானவை இந்திய நாடு கடந்து, அயல் நாடுகளிலும், ஐ.நா. மன்றத்திலும் பாராட்டி வரவேற்கப்படுகின்றன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் அச்சுறுத்திய கொரோனா, அடுத்தடுத்து நிகழ்ந்த புயல் மழை வெள்ளக் கொடுமைகள், கரம் கொடுத்து உதவ வேண்டிய ஒன்றிய அரசின் பாராமுகம், அது அளிக்க வேண்டிய நிதியையும் அளிக்க முடியாதென நாடாளுமன்றத்திலேயே கூறிய பிடிவாதம் அனைத்தையும் கடந்து தமிழ்நாட்டு மக்களை எல்லா வகையிலும் காத்து - எல்லாருக்கும் எல்லாம் என்பதைத் தத்துவமாகவே வடித்துத் திட்டங்களைச் செயல்படுத்தி தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உயர்த்தியுள்ளார்கள்.

இந்தியாவின் சிறந்த முதலமைச்சர் எனப் பாராட்டப்பட்டபோது, எனக்குப் புகழோ, பாராட்டோ தேவையில்லை; தமிழ்நாடு இந்தியாவின் முதல் மாநிலம் எனப் புகழப்படுவதையே விரும்புகிறேன்; அதுவே எனது ஆசை என்று கூறிப் பாடுபட்டு அந்த இலக்கை இன்று அடைந்து புகழின் உச்சத்தைத் தொட்டுள்ளார் நம் திராவிட நாயகர் அவர்கள் !

இன்று தமிழ்நாட்டு மக்கள் பாராட்டுகின்றனர்; மகளிர், மாணவர்கள் தொழிலாளர்கள், தொழில் முகவர்கள் அனைவரும் பாராட்டுகின்றனர்; பத்திரிகைகள் பாராட்டுகின்றன; ஊடகங்கள் போற்றுகின்றன. பிற மாநில அரசுகள் பாராட்டுகின்றன. நீதிமன்றங்கள் பாராட்டுகின்றன. இத்தனைக்கும் மேலாக ஒன்றிய அரசே தமிழ்நாட்டு அரசைப் பாராட்டி எராளமான விருதுகளை வழங்கியுள்ளது. அவையெல்லாம் தமிழ்நாட்டிற்கும் நமக்கும் பெருமையையும். பெருமிதத்தையும் ஏற்படுத்தும்.

அந்த ஒன்றிய அரசின் பாராட்டுப் பட்டியலில் இதோ சில ;

முதலமைச்சர் அவர்களிடம் தமிழ்நாடு காவல்துறை தலைவர் சென்னை எழும்பூரில் அமைந்துள்ள மாநில காவல் கட்டுப்பாட்டு அறைக்கு British Standards Institution 3.11.2021 அன்று வழங்கிய ISO 270001 : 2013 சர்வதேசத் தரச் சான்றிதழைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் அவர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அதுல்ய மிஸ்ரா அவர்கள் புதுடெல்லியில் 30.11.2024 அன்று நடைபெற்ற இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு சார்பில் FICCI Turf 2024 14வது சர்வதேச விளையாட்டுக் கருத்தரங்கில் 2024ஆம் ஆண்டிற்கான இந்திய விளையாட்டு விருதுகள் வழங்கும் விழாவில் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு வழங்கிய விருதை 4.12.2024 அன்று காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பாகச் சேவை புரிந்த முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு ஒன்றிய அரசால் 6.12.2021 அன்று வழங்கப்பட்ட விருது !

ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை 8.12.2021 அன்று மாற்றுத் திறனாளிகள் உரிமை ஏற்றத்திற்காக வழங்கிய தேசிய விருது !

தொடர்ச்சி 4ஆம் பக்கம்